# சார்ந்திருத்தலில் பங்குபெறுதல்

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல் IX

By Wayne Jacobsen

கடந்த 10-12 வருடங்களில் உலகம் முழுவதும் நான் ஆயிரக்கணக்கான விசுவாசிகளைச் சந்தித்திருக்கிறேன்; அவர்கள் பல்வேறு குழுக்களில்—தானாகவே எழுகிற ஐக்கியத்தில் இரண்டு மூன்றுபேராகவும், பல நூற்றாண்டுகளாக இருக்கிற சபைகளிலும், அதற்கு இடைப்பட்ட எல்லா வகையான குழுக்களிலும்—தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முயற்சிசெய்வதை நான் உன்னிப்பாகக் கவனித்திருக்கிறேன். அநேக இடங்களில் தேவனுடைய மக்கள் அவரை அறிவதில் வளர்ந்து செல்கையில், அவருடைய ஜீவனை ஒன்றாகச் சேர்ந்து பகிர்ந்துகொள்வதைப் பார்த்து நான் பூரிப்படைந்திருக்கிறேன். வேறு சில இடங்களில், தேவனுடைய மக்கள் புதிய ஏற்பாட்டு சரீர வாழ்க்கையின் ஏதோவொரு முறைமையை உருவாக்கப் போராடுவதைப் பார்த்து நான் துக்கம் அடைகிறேன். அவர்கள் இப்படி ஊக்கமாக முயற்சிசெய்தாலுங்கூட, தொடர்ந்து ஏமாற்றம் அடைகிறார்கள்.

கிறிஸ்துவின் ஜீவனில் வாழ்கிற மகிழ்ச்சியை எல்லாரும் அறிய வேண்டும் என்று நான் விரும்புவதால், எது வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டுபிடிக்க நான் எப்போதும் முயற்சிசெய்கிறேன். சில குழுக்கள் கர்த்தருடைய நிறைவை ஒன்றாகச் சேர்ந்து அனுபவித்து மகிழும்போது, வேறு சில குழுக்கள் அதை ஏன் தவறவிடுகின்றன? இயேசுவின் பிரசன்னம்தான் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்று சிலர் சொல்லக்கூடும். அவர்கள் சொல்வது ஓரளவுக்கு உண்மைதான் என்றாலுங்கூட, அவர் எல்லா இடங்களிலும்—மிகவும் அடிமைத்தனத்தில் இருக்கிற மக்களிடையேகூட—இருக்கிறார் என்றும், அவர் அவர்களைத் தம்மிடம் இன்னும் நெருங்கி வர அழைக்கிறார் என்றும் நான் காண்கிறேன்.

எப்படி கூடி வர வேண்டும் என்று தேவன் சொன்னபடி சிலர் கூடிவருவதால் அவர்கள் கர்த்தருடைய நிறைவை அனுபவித்துமகிழ்கிறார்கள் என்றும், மற்றவர்கள் மனிதர்களின் பாரம்பரியத்தைப் பின்பற்றுவதால் அவர்கள் அதை அனுபவித்து மகிழவில்லை என்றும் சிலர் சொல்லக்கூடும். இதுவும்கூட ஓரளவுக்கு உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், சபை வாழ்க்கையைப்பற்றி வேதாகமத்திற்கு மிகவும் ஒத்த கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கிடையே செயல்படாத உறவுகள் இருந்ததையும், ஆவிக்குரிய குழந்தைகளைப்போன்ற கள்ளங்கபட மற்றவர்கள் தேவனுடைய வேலையின் மகிழ்ச்சியில் மூழ்கித்திளைப்பதையும் நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

இல்லை, கடைசியில், இது அறிவையோ, முதிர்ச்சியையோ, சரியான கோட்பாடுகளையோ, அல்லது முயற்சியையோ, ஒப்படைப்பையோபற்றிய காரியம் அல்ல. மிகவும் ஆரோக்கியமான சூழலில் தேவனுடைய ஜீவனை வாழ்ந்துகாட்டுகிறவர்கள் பகிர்ந்துகொண்டு சார்ந்திருப்பதின் அழகைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சொல்லும்போது, அவர்கள் ஒரு தலைவனையோ அல்லது ஒருவரையொருவரையோ அல்லது ஒரு குறிப்பிட்ட சபை அமைப்புமுறைமையையோ சார்ந்திருக்கக் கற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, பிதாவை எப்படி சார்ந்திருக்க வேண்டும் என்றும், தங்களுக்கிடையே அவருடைய வேலையில் எப்படிப் பங்குபெறுவது என்றும் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கற்றுக்கொள்கிறாகள்.

### *நமக்கு நண்பர்கள் தேவையா?*

என் வாழ்க்கையின் பெரும்பாலான நாட்களில், சபை வாழ்க்கை கட்டாயமாகத் தேவை என்ற தொனியில் மக்கள் பேச நான் கேட்டிருக்கிறேன். “சரீரம் கூடிவரும்போதெல்லாம் ஒரு நல்ல கிறிஸ்தவன் அங்கு நடக்கும் ஆராதனைகளில் கலந்துகொள்ள வேண்டும்” என்றும், “நீங்கள் ‘சபைக்கு வர வேண்டும்,’ இல்லையென்றால் நீங்கள் தவறு செய்துவிடுவீர்கள்” என்றும் மக்கள் பேசக் கேட்டிருக்கிறேன். கலந்துகொள்ள வேண்டியது கட்டாயம் என்ற காரணம்தான் நாம் கலந்துகொள்வதற்கான உந்தும்சக்தி என்றால், அந்த சரீர வாழ்க்கை பரிதாபமானது. தரித்திரம் கூட்டாளியை விரும்புகிறது என்று ஒரு பழமொழி உண்டு. கடமை, கட்டாயம், ஒப்படைப்பு என்று பேசும்போதெல்லாம், ‘சபையில் கலந்துகொள்ளவேண்டும்’ என்பதற்கான இயக்கும் சக்தி அந்தப் பழமொழியை விட ஒன்றும் மேலானதல்ல என்று நான் நினைக்கிறேன். நாம் இதை எதிர்கொண்டாக வேண்டும். வாராவாரம் ஒரே ஆராதனையில் சும்மா உட்காருவது கொஞ்சம் சலிப்பை உண்டாக்கக்கூடும். மிகவும் வியத்தகு பேச்சாளர்களின் பேச்சை நான் கேட்டிருக்கிறேன். ஆனால், அவர்களும்கூட வாராவாரம் களைத்துப்போவதையும், வருடாவருடம் ஒரே காரியத்தைத் திரும்பத்திரும்பச் சொல்வதையும் நான் பார்த்திருக்கிறேன்.

சரீர வாழ்க்கை தேவனுடைய பிள்ளைகளுக்கு வேதனையான ஒரு கடமையாக இருக்கக்கூடாது, மாறாக, அது பிதாவினுடைய வீட்டின் மகிழ்ச்சியைப் பிரதிபலிக்க வேண்டும். சபை வாழ்க்கை என்பது அநாவசியமான கூட்டங்கள், கட்டுப்படுத்துகிற தலைவர்கள், வம்புநிறைந்த உறவுகள், ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்தல், தந்திரமாகக் கையாளுதல் போன்றவை என்ற வகையில் சபை வாழ்க்கையை அனுபவித்தவர்களுக்கு இதை நம்புவது கொஞ்சம் கடினமாக இருக்கக்கூடும். ஆயினும், உண்மையான சபை வாழ்க்கையில் இப்படிப்பட்ட எதுவும் இல்லை.

புதிய ஏற்பாடு சரீர வாழ்க்கையைப்பற்றிப் பேசும்போது, தேவை அல்லது கடமை என்ற தொனியில் அது பேச வில்லை. கட்டாயத்தினிமித்தம் தேவனுடைய குடும்பத்தில் பங்குகொள்ள வேண்டும் என்று அது விசுவாசி களைக் கட்டாயப்படுத்தவில்லை. மாறாக, தேவனுடைய மகிமையை ஈடுஇணையற்ற விதத்தில் வாழ்ந்து காட்டு வதில் பங்குகொள்ள அது அவர்களை அழைக்கிறது. அவருடன் உங்களுக்கிருக்கும் தனிப்பட்ட உறவினால், அதிக பட்சம், நீங்கள் தேவனுடைய நபர் மற்றும் ஞானம் ஆகியவைகளின் ஒரு சிறிய அம்சத்தை மட்டுமே சுவைக்க முடியும். இதை பவுல் இருண்ட கண்ணாடியில் நாம் பார்த்தால்எப்படி ஒரு காட்சியின் பகுதியை கணநேரம் மட்டுமே பார்ப்போமோ அதற்கு ஒப்பிடுகிறார் (1 கொரி. 13:12). அதிகபட்சம், நாம் ஒரு பகுதியை மட்டுமே பார்ப்போம். நம் பகுதியை, அவருடைய குடும்பத்தின் மற்ற அவயவங்களால் வெளியாக்கப்படுகிற மற்ற அநேகப் பகுதிகளோடு இணைக்கும்போது, தேவனையும், அவருடைய வேலையையும்பற்றிய முழுமை யான சித்திரத்தை நாம் பெறுகிறோம். எனவேதான், சபை என்பது கிறிஸ்துவின் நிறைவு என்று பவுல் விவரிக் கிறார் (எபே. 1:23).

நீங்கள் கற்பனைசெய்ய முடியாத அளவுக்கு நேசிக்கப்படும்போது, இன்னும் அதிகமான மகிமையின் உயரத் துக்கு நீங்கள் அழைக்கப்படும்போது, மற்றவர்களிலுள்ள அவருடைய வல்லமையால் நீங்கள் உற்சாகப்படுத் தப்படும்போது, அவர்களுடைய ஆழமான பார்வைகளால் நீங்கள் பிரகாசிக்கப்படும்போது, பங்குகொள்ள வேண்டும் என்று ஒருவரையும் கட்டாயப்படுத்தத் தேவையில்லை. ஆனால், முழுக்க முழுக்க தேவனால் மட்டுமே அப்படிப்பட்ட வாழ்க்கையை உற்பத்திசெய்ய முடியும். அதை, நாம் அவரில் தேடுவதற்குப்பதிலாக, ஒருவரிலொருவர் தேடினால், தேவன் நமக்கு வழங்குகிற நிஜத்துக்குப்பதிலாக, நாம் ஒரு மலிவான பதிலீட்டை வாழ்வோம்.

***அவரே நம் தேவை***

நிஜத்தில், நாம் ஒருவருக்கொருவர் தேவையில்லை. அவரே நமக்குத் தேவை. இந்த எளிமையான ஆதாரத் தோடு ஆரம்பிக்காத சரீர வாழ்க்கை நிச்சயமாகக் குறியைத் தவறவிட்டுவிடும். உண்மையான சரீர வாழ்க்கை எவ்வளவுதான் மதிப்புக்குரியதாகவும், வளமூட்டுகிறதாகவும் இருந்தாலுங்கூட, அதைத் தேவனுடைய அன்றாட பிரசன்னம் நம் ஒவ்வொருவரிலும் வேலைசெய்வதற்குப் பதிலீடாக மாற்றிவிட்டால், அது நம் பயணத்தில் நமக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்குப்பதிலாக, தடையாக மாறிவிடும்.

இந்த இரண்டையும் நாம் குழப்ப வேண்டாம். வேதவாக்கியங்கள் இதைப்பற்றித் தெளிவாகப் பேசுகின்றன. அவர் ஒருவரே நம் பலம், கேடகம். அவர் ஒருவரே நம் புகலிடம். முற்றிலும் அவரைச் சார்ந்து எப்படி வாழ வேண்டும் என்று அவர் நம் ஒவ்வொருவருக்கும் கற்றுத்தர விரும்புகிறார். நாம் ஒருவரோடொருவர் கொள்கிற உறவு அப்படி வாழ்வதை உற்சாகப்படுத்த வேண்டுமேதவிர, அதைத் தள்ளிவிட்டு அதின் இடத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குகையின் புகைப்படத்தை நான் சமீபத்தில் பார்த் தேன். அப்படிப்பட்ட ஒரு குகை இருக்கிறது என்ற செய்தி சமீபத்தில்தான் வெளியாகி யிருந்தது. அந்தக் குகையின் ஒரு மண்டபத்தில் ஒரு மிகப் பெரிய மாடத்தை வைத்த பிறகும், அங்கு நிறைய இடம் இருக்குமாம். அந்த அளவுக்கு அந்தக் குகை பெரியது. அதின் மேற்கூரையில் இருந்த ஒரு துவாரத்தின் வழியாக கீழே தொங்கவிடப்பட்ட ஒரு கயிறைப் பிடித்துக்கொண்டுதான் மேலே ஏறி வர முடியும். நான் பார்த்த அந்தப் புகைப் படத்தில், ஒரு குழுவினர் மேற்பரப்புக்கு வர கயிறைப் பிடித்து ஏறிக்கொண்டிருந் தார்கள்.

அந்தப் புகைப்படம் அவர்களுடைய பயணத்தின் தோழமையுணர்ச்சியைக் கச்சிதமாக சித்திரித்தது; அதே நேரத்தில், அவர்களுடைய சார்ந்த நிலையைச் சரியான இடத்தில் வைத்தது. அந்த மண்டபத்தைவிட்டு வெளியே வர அவர்கள் ஒவ்வொருவரும் அந்தக் கயிறையே சார்ந்திருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தியிருந் தாலும், அவர்களுடைய அனுபவமும், அறிவுரையும் மதிப்புள்ளவைகளாக இருந் தாலும், மேற்பரப்புக்கு ஏறிச்செல்ல அவர்கள் ஒவ்வொருவரும் அந்தக் கயிறைப் போதுமான அளவுக்கு இன்னும் நம்ப வேண்டியிருந்தது. அவர்களிடம் மிகச் சிறந்த நோக்கங்கள் இருந்தாலுங்கூட, அவர்களில் ஒருவர்கூட அந்தக் கயிறுக்குப் பதிலீடாக மாறியிருக்க முடியாது. ஒருவனும் இன்னொருவனுக்காக ஊர்ந்து வெளியே செல்ல முடியாது. அவர்கள் ஒவ்வொருவரும் ஒருவர்மேல் ஒருவர் வருடக் கணக்காக ஏறிக் கொண்டிருந்தாலுங்கூட, மேற்பரப்புக்குச் செல்லும் வழியை ஒருபோதும் கண்டுபிடித் திருக்க முடியாது.

அதுபோல, தேவன் மட்டுமே நமக்கு வழங்கக்கூடியதை நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் பெற முயற்சிசெய்யாத போது மட்டுமே, ஒருவரோடொருவர் நாம் கொண்டுள்ள உறவு ஆரோக்கியமாக வளர முடியும். மேலே ஏறு பவர்களுக்குக் கயிறு இருப்பதுபோல, நாம் அவரை மட்டுமே சார்ந்துகொள்ள வேண்டும் என்றும், அவரைச் சார்ந்து வாழ்வதைக் கற்றுக்கொள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார்.

***எந்தப் பதிலீட்டையும் எடுத்துக்கொள்ளாதீர்கள்***

தேவனுடைய மக்கள் பிதாவின் பிரசன்னத்தில் அன்றாடம் சார்ந்து வாழக் கற்றுக்கொள்வதிலிருந்து சரீர வாழ்க்கை இயற்கையாக எழுகிறது. சேர்ந்து வாழ்கிற வீரியமுள்ள சரீர வாழ்க்கையைக் கண்டுபிடிக்கிற மக்களுக்கு அந்தப் பேரார்வம் ஒரு முக்கியமான மூலக்கூறு. இயேசு தம்மை சரீரத்தில் விளங்கப்பண்ணினால், நாம் ஒருவரையொருவர் சார்ந்திருப்பதின்மூலம், அவரைச் சார்ந்திருக்கிறோம் என்றுதானே பொருள் என்று நினைக்கத் தோன்றும். இது ஒரு தந்திரமான உபாயம் என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். ஆனால், இயேசுவைவிட்டு நம் கண்களை நீக்கிவிட்டு, சபை என்ற ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதற்காக மற்ற மக்கள்மேல் அல்லது ஏதாவது ஓர் அமைப்புமுறையின்மேல் நம் கண்களை வைத்தால், குறைந்த பட்சம் ஆவிக்குரியரீதியில், இது பேராபத்தை உண்டாக்கக்கூடும்.

கயிறைப் பிடித்து மேலே ஏறுபவர்கள் கயிறை விட்டுவிட்டால்—ஒருவரையொருவர் பிடித்துக்கொள்வதற்காக விட்டாலுங்கூட—அதன் விளைவு பேரழிவு. நாம் அவருடன் இன்னும் அதிகமான உறவு வைத்துக்கொள்வதற்காகவும், அவர்மேல் இன்னும் அதிகமான நம்பிக்கை வைத்துக்கொள்வதற்காகவும் பயணம்செய்து கொண்டிருக்கிற மக்கள். பெரும்பாலானவர்கள் தனியாகச் சென்றால் எவ்வளவு தூரம் செல்வார்களோ, அதைவிட அதிகமான தூரம் சேர்ந்து செல்ல நாம் ஒருவருக்கொருவர் உதவ முடியும். ஆனால், நாம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. எங்கு மக்கள் எல்லாவற்றுக்காகவும் தேவனைச் சார்ந்து வாழக் கற்றுக்கொள்கிறார்களோ, அங்கு சரீர வாழ்க்கை செழித்து வளர்கிறது; அங்கு அவர்களுடைய உறவுகள் அந்த வளர்ச்சிக்கு உதவுகின்றன.

ஆயினும் அறியாமலேயே, துரதிருஷ்டவசமாக, இன்று சரீர வாழ்க்கை என்றழைக்கப்படுவது தேவனைச் சார்ந்து நாம் வாழ்வது நம் இருதயங்களில் ஆழமாக வேரூன்றவிடாமல், அதற்குப் பதிலீடுகளை வழங்குகிறது. தேவன் கடந்த காலத்தில் செய்த ஒன்றை மறுபடியும் உருவாக்க முயற்சிப்பது பாரம்பரியம்; பாரம்பரியம் அப்படிப்பட்ட ஒரு முயற்சியாக எளிதாக மாறிவிட முடியும். பெரும்பாலான செயல்திட்டங்கள் எதிர்காலத்தில் நாம் செய்யவிருக்கும் காரியங்களில் தேவனுடைய கரம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. நாம் தேவனை இன்னும் அதிகமாக நம்புவதற்கு நம்மை நடத்தி, நிகழ்காலத்தில் வேலைசெய்கிற தேவனுக்கு நாம் மாறுத்தாரம் அளிக்காதபடிக்கு அந்த இரண்டும் (பாரம்பரியம், செயல்திட்டங்கள்) நம்மை விலக்கிவைக்கின்றன. மத்தேயு 6ஆம் அதிகாரத்தை வாசியுங்கள்; தேவன் நம்மைப் பராமரித்து, நம்மை அவருடைய ஜீவனுக்குள் நடத்துவார் என்ற உண்மையின் முழுமையான பாதுகாப்பில் வாழ்கிற நம் ஒவ்வொருவரையும்பற்றி இயேசு என்ன சொல்கிறார் என்று கற்றுக்கொள்ளுங்கள். இது நாம் ஒவ்வொருவரும் அவருடனான நம் உறவில் சரிசெய்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அவரை மட்டுமே நம்பக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னவுடன் பயமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். தலைவர்களை, மற்ற விசுவாசிகளை அல்லது ஏதோவொரு வகையான சபையைச் சார்ந்திருப்பது குறுகிய காலத்துக்கு எளிதாக இருப்பதுபோல் தோன்றக்கூடும். ஆனால், மற்றவர்கள் நம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாதபோது, அல்லது இன்னும் அதிகமாகப் போர்க்குணத்துடன் நம்பிக்கைத் துரோகம் செய்யும்போது, அதன் விளைவாக நிரந்தரமான ஏமாற்றமும், காயமுமே ஏற்படும். அதனால் ஏற்படுகிற வலி, நாம் தவறான நபரை அல்லது இடத்தைச் சார்ந்திருந்தோம் என்பதற்குப் போதுமான சாட்சியாகும்.

நாம் அவரைச் சார்ந்து வாழ ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிறோம். அப்படிச் செய்யும்போது, நாம் அவரைச் சார்ந்து வாழ்வதற்குப்பதிலாக ஒருவரையொருவர் சார்ந்து வாழ முயற்சித்து முந்தையதை அழித்துவிடாதபடிக்கு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

***நம் திறமைகளை அளவுக்கு அதிகமாக மதிப்பிடுதல்***

நான் சொன்ன ஒரு பதிலைக் கேட்டவுடன், நானே அதிர்ச்சியடைந்தேன். ஏனென்றால், பொதுவாக நான் ஒரு வாக்கியத்தைப் பேசுவதற்குமுன் மூன்று வாக்கியங்களை சிந்தித்துவிடுவேன். என்னைப்போன்ற இப்படிப்பட்ட ஒரு நபர் அப்படி ஒரு பதில் சொன்னது ஆச்சரியம். ஏனென்றால், இப்படி அடிக்கடி நடக்காது. கடந்த ஒன்றரை மணி நேரமாக நான் ஒரு முந்நாள் டுல்சா இரவுக் குழுமம் ஒன்றில் தேடும் இருதயமுள்ள ஒரு கூட்டம் விசுவாசிகளுடன் உட்கார்ந்து, பிதாவை அறிந்து, அவருடைய பிரசன்னத்தின் நிஜத்தில் நடக்கிற வியத்தகு பயணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது, ஒருவர், “மக்கள் தேவனுடைய ஜீவனின் நிறைவில் வாழ்வதற்குத் தடையாக இருக்கிற மிகப் பெரிய தடை எது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“நம் திறமைகளை நாம் அளவுக்கு அதிகமாக மதிப்பிடுவதுதான் மிகப் பெரிய தடை என்று நான் நினைக்க ஆரம்பித்திருக்கிறேன்,” என்று நான் பதில் சொன்னேன். என் பதில் எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. இது போன்ற ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நான் எப்போதாவது இப்படிப் பதில் சொல்லியிருக்கிறேனா என்று எனக்குத் தெரியாது. அதுதான் என் இறுதியான பதிலா என்று நான் ஒரு கணம் நின்று, சிந்திக்க வேண்டியிருந்தது. மக்கள் பிதாவைச் சார்ந்திருப்பதை வளர்க்க, பண்படுத்த, தங்கள் பேரார்வத்தை இழக்கும்போது, மனித முயற்சியால், அதிக பட்சம், சரீர வாழ்க்கை என்ற மாயத் தோற்றத்தை மட்டுமே உருவாக்க முடியும்.

ஆயினும், எவ்வளவு அதிகமாக நான் சிந்தித்தேனோ, அவ்வளவு அதிகமாக தேவன் என் வாழ்க்கையில் செய்து கொண்டிருந்த ஒரு காரியத்தை அவர் எனக்குள் பிரகாசிப்பித்ததை நான் பார்த்தேன். சரியான வழிமுறையுடன் ஊக்கமான முயற்சி சேர்ந்து கொண்டால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும் என்று நான் நினைத்த துண்டு. ஆனால், கடந்த பல ஆண்டுகளில், என் மிகச் சிறந்த முயற்சிகள்கூட தோற்றுப்போனதால், கர்த்தர் வீட்டைக் கட்டவில்லையென்றால், அதைக் கட்டுகிறவர்களின் முயற்சி வீண் (சங். 127:1) என்று நான் கடைசியாகக் கற்றுக்கொண்டேன். இந்த வாழ்க்கையின் மகிழ்ச்சி அவர்மேல் நம்பிக்கை வைத்து, அனுதினமும் அவருடன் கொள்ளும் உறவின்மூலம் வளருகிற நம்பிக்கையினால், அவருடைய நடத்துதலைப் பின்பற்றுவதில் காணப்படுகிறது.

ஆவியானவரின் ஜீவன் என்று நாம் அழைக்கிற இந்த வியத்தகு காரியத்தை உருவாக்க நாம் நம்மையும், மற்றவர்களையும் அழுத்துவதைப்பற்றி அந்த இரவில் நீண்ட நேரம் பேசினோம். அப்போது, நம் திறமைகளை அளவுக்கு அதிகமாக மதிப்பிடுதல் நம்மை விடுதலையாக்குவதற்குப்பதிலாக, நம் நடையைச் சிக்கலாக்குகிறது என்பதை உறுதியாகத் தெரிந்துகொண்டேன். அது, நாம் நம் தோல்விகளில் சிக்கிக்கொண்டோம் என்ற உணர்வுக்கும், நம் வெற்றிகளில் பெருமைப்படுவதற்கும் வழியாகிவிடுகிறது. அதனால், மிகச் சிறந்தது என்று நாம் நினைக்கிறதைச் செய்ய நாம் மற்றவர்களைத் தந்திரமாகக் கையாளத் தொடங்கிவிடுகிறோம்; அது ஒவ்வொருவரும் தங்கள் கண்களை இயேசுவின்மேல் வைப்பதற்குப்பதிலாக மக்கள்மேல் வைப்பதற்கு உற்சாகப்படுத்துகிறது. இதனால் நாம் தவறான இடத்தில் முயற்சி செய்கிறோம், நம் சக்தியை வீணாக்குகிறோம். தேவன் எப்படி வேலைசெய்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது மட்டுமே, நம் வேலையை எப்படிச் செய்ய வேண்டும் என்று நாம் அறிவோம். தங்கள் சொந்தத் திறமைகளை நம்புகிறவர்கள் தேவனில் உள்ள ஜீவனின் நிஜத்தையும், அந்த ஜீவனை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்கிற மகிழ்ச்சியையும் ஒருபோதும் கண்டுபிடிக்க மாட்டார்கள்.

***கொஞ்சங்கூட இல்லை***

தேவனுடைய ஜீவன் பவுலின் வாழ்க்கையைத் தலைகீழாக்கிவிட்டது. பவுல் ஒரு வைராக்கியமான மதவாதி. அவன் தன் திறமைகளில் மேன்மைபாராட்டினான்; தன் சாதனைகளில் பெருமைப்பட்டான். அப்படிப்பட்ட நபர் மாம்சத்தில் கொஞ்சங்கூட நம்பிக்கை வைக்காத ஒரு நபராக மாறிவிட்டார் (பிலி. 3:1-11). தேவன் பவுலின் வாழ்க்கையைப் பிடித்துக்கொள்வதற்குமுன், நீங்கள் அவருடன் எப்படி ஐக்கியம்கொள்ள விரும்பியிருப்பீர்கள்? அதைச் சகித்திருக்கவே முடியாது. தான் எப்போதும் சரி என்றும், தான் மற்ற எல்லாரையும்விட தேவனுக்கு மிக நெருக்கமானவன் என்றும், தான் பார்த்ததுபோல் மற்றவர்கள் காரியங்களைப் பார்க்காவிட்டால் அவர்களைக் கொலைசெய்யத் தனக்கு உரிமை உண்டு என்றும் அவன் நினைத்தான். இன்று, நாம் உண்மையான கற்களைவிட, குற்றச்சாட்டுகளையும், வம்புப்பேச்சையும் நிச்சயமாக அதிகமாகப் பயன்படுத்துகிறோம். இதனால் அதே விளைவுதான் ஏற்படுகிறது.

ஊடுருவிப்பாய்கிற தம் அன்பைக்கொண்டு இயேசு பவுலை சிறைப்பிடித்தபின், நிலைமை எப்படி மாறிற்று என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் பவுலைத் தம்மிடம் இழுத்துக்கொண்டு அவனை மாற்றினார்; முதலில் அவன் தன் சொந்தத் திறமைகளில் நம்பிக்கை வைத்திருந்தான்; ஆனால், நிலைத்து நிற்கிற எதுவானாலும் அதை இயேசுவால் மட்டுமே செய்ய முடியும் என்று அறிந்தவனாக இயேசு அவனை மாற்றினார். அவரே மக்களை சத்தியத்திடம் இழுக்கிறவர். அவரே வாழ்க்கைகளை மாற்றுகிறவர். அவரே தம் இராஜ்ஜியத்தின் குறிக்கோளை விரிவாக்குகிற வழிகளில் தம் சரீரத்தை இணைக்கிறவர்.

தன் மிகச் சிறந்த முயற்சிகளெல்லாம் சாக்கடைத் தண்ணீர்தானேதவிர வேறொன்றுமில்லை, தன்னிலோ அல்லது மற்றவர்களிலோ தேவனுடைய மகிமையை வெளிக்காட்டுவதில் அந்த முயற்சிகள் ஒன்றுக்கும் உதவாது என்பதை அப்போது பவுலால் பார்க்க முடிந்தது. மனித முயற்சி உற்பத்திசெய்கிற நீதி அருவருப்பானது என்று கண்டுகொண்டார். அதற்கு மாறாக, தேவன்மேல் வைத்திருந்த நம்பிக்கை வளர்ந்தபோது உற்பத்தியான நீதியில் அவர் பிரியமாயிருந்தார்.

அவர் தன் மாம்சத்தின்மேல் எந்த நம்பிக்கையும் வைக்கவில்லை. எனவே, மற்றவர்களும் அவர்களுடைய மாம்சத்தின்மேல் நம்பிக்கைவைத்து நடிக்க வேண்டும் என்று அவர் அவர்களை அழுத்தவில்லை. இந்த இராஜ்ஜியத்தில் எல்லாம் தேவன் கிரியைசெய்வதிலிருந்து பாய்ந்தோட வேண்டும் என்று அவர் அறிந்திருந்தார். நாம் அவருக்கு மறுமொழிதான் கொடுக்க முடியுமே தவிர, அவருடைய ஜீவனை நாமாகவே உற்பத்தி செய்ய முடியாது. இதில் சரீர வாழ்க்கையும் அடங்கும். மற்ற விசுவாசிகளுடன் கொள்கிற அர்த்தமுள்ள உறவுகளில் நாம் அவருடைய ஜீவனைப் பகிர்ந்துகொள்ள விரும்பினால், நாம் அவரைத்தான் சார்ந்திருக்க வேண்டும். சபை வாழ்க்கையைப்பற்றிய வேதாகமத்தின் முன்மாதிரிகள் என்று நாம் கருதுபவைகளைப் பின்பற்றினாலுங்கூட, நம்மால் அதை சாதிக்க முடியாது. தேவன் எப்படி வேலைசெய்கிறார் என்பதை நாம் அறிவதற்கு அவை நமக்கு உதவிசெய்யக்கூடும்; ஆனால், அவருடைய ஜீவனின் மகிமையில் நாம் பங்குகொள்வதற்கு அவை நமக்கு உதவாது. சபையின் தலையானவரால் மட்டுமே அவருடைய சபையைக் கட்ட முடியும். நம்மால் அதின் மாயத் தோற்றங்களைத்தான் கட்ட முடியும்.

*அவர்மேல் சார்ந்திருத்தலைப் பகிர்ந்துகொள்ளுதல்*

தங்கள் வீடுகளில் வீட்டுக் கூட்டத்தை ஏற்படுத்த முயற்சிசெய்கிற ஒரு கூட்டம் மக்களுடன், சமீபத்தில், நான் கொஞ்சம் நேரம் செலவழித்தேன். அவர்களுக்குமுன்பாக நான் ஒரு காட்சியை விவரித்துக் காண்பித்தேன். “இப்போதிலிருந்து இன்னும் இரண்டு மாதங்களில், இதில் இரண்டு குழுக்கள் பரவசமடைந்தவர்ளால் நிறைந் திருக்கின்றன என்றும், வேறு இரண்டு குழுக்கள் சுமுகமாகச் செல்கின்றன என்றும், மற்ற இரண்டு குழுக்கள் முற்றிலும் செத்துவிட்டன, சலிப்படைந்து விட்டன என்றும் வைத்துக்கொள்வோம். அப்போது இந்தக் குழுக் களை ஊக்குவிக்க முயற்சிசெய்தவர்களைப்பற்றி நாம் என்ன நினைப்போம்? இந்த நிலைமையில் நாம் என்ன செய்வோம்?”

உயிர்த்துடிப்புடன் இருக்கிற குழுக்களை நல்ல தலைவர்கள் வழிநடத்துகிறார்கள் என்றும், போராடிக்கொண் டிருக்கிற குழுக்களை பலவீனமான தலைவர்கள் வழிநடத்துகிறார்கள் என்றும் பிரபலமான ஞானம் சொலலும். ஆனால், தேவன் அதை அப்படிப் பார்ப்பதில்லை. சில குழுக்கள் உயிர்த்துடிப்புடன் இருப்பதுபோல் தோன்ற லாம்; காரணம் என்னவென்றால், சரீர வாழ்க்கையின் ஒரு மாயத் தோற்றத்தைப் பொய்யாக அமைப்பதில் அவர்களுடைய தலைவர்கள் கைதேர்ந்தவர்கள். அவர்களுடைய உயிர்த்துடிப்புள்ள ஆளுமைகள் அல்லது அவர்களுடைய கொடைகள் ஒரு கூட்டம் மக்களை அவர்களிடம் இழுக்கின்றன. ஆனால், விசுவாசிகள் உண்மையாகவே ஜீவனைப் பகிர்ந்துகொள்வதைப் பிரதிபலிக்கிறதா என்பது இன்னொரு விஷயம். அதுபோல, போராடிக்கொண்டிருக்கிற குழுக்களிலும் நல்ல ஊக்கமளிக்கிறவர்கள் இருக்கக்கூடும். ஆனால், தேவன் செய்யாத ஏதோவொன்றைச் சாதிக்க அவர்கள் முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

“பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி தாமாய் எதையும் செய்ய மாட்டார்,” என்று இயேசு கூறினார். பிதா செய்ததையே குமாரன் செய்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக, அநேகர் இன்று சபை வாழ்க்கை வாழ்கிற விதத்தைப் பார்க்கும்போது, பிதாவானவர் செய்யாததுபோல் தோன்றுகிறதை தேடிப் பார்த்து, அங்கு சென்று, முயற்சிசெய்து, ஏதோவொன்றைச் செய்ய விரும்புவதுபோல் தோன்றுகிறது. விளைவுகள் நமக்கு ஆச்சரியமல்லவே! மனித முயற்சியால் தேவனுடைய கனியை உற்பத்திசெய்ய முடியாது. ஆனால், சரணடைந்த இருதயங்களால் தேவன் அவர்களுக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிற எல்லாவற்றிலும் பங்கடைய முடியும்.

நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கக்கூடாது என்று நான் சொல்லும்போது, நாம் நம்பத்தகுந்த, நம்பிக்கைக் குரிய சகோதர சகோதரிகளாக இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. துன்ப வேளைகளில் உத்தமமாக இருப்பதற்கும், முழுக்க முழுக்க உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கும், என்ன நேர்ந்தாலும் சரி கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் உண்மையாக இருப்பதற்கும் எங்கு மக்கள் தங்கள் சொந்தத் திட்டத்திலிருந்தும், உடைந்த தன்மையிலிருந்தும் போதுமான அளவுக்கு விடுதலை பெற்றிருக்கிறார்களோ, அங்குதான் சரீர வாழ்க்கையின் மிக ஆழமான அனுபவங்கள் நிகழ்கின்றன. ஆனால், நீங்கள் அவர்களைச் சார்ந்து வாழ ஆரம்பித்து விட்டால், இயேசுவுடனான உங்கள் உறவை குறுக்காகச் சென்று மாற்றிவிடுகிறீர்கள். உண்மை யில், இயேசுவை நன்றாக அறிந்த மக்கள் நீங்கள் அதைச் செய்ய வேண்டும் என்று கற்பனைகூடச் செய்ய மாட்டார்கள். நீங்கள் முற்றிலும் அவரையே சார்ந்திருக்க வேண்டும் என்றுதான் அவர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். ஏனென்றால், அவரே ஜீவனுக்கான ஒரே வழி.

சத்தியம் இதோ இங்கு இருக்கிறது: உண்மையான, நம்பத்தகுந்த சரீர வாழ்க்கை தேவன் தருகிற ஒரு கொடை; அது வேதாகமத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றி மனித முயற்சிகளால் நாம் ஏற்பாடு செய்கிற ஒன் றல்ல. அதை சிருஷ்டிப்பதற்குப்பதிலாக, அவர் நம்மைத் தம் சரீரத்திற்கிடையே எப்படி வைக்கிறார் என்றும், அவர் நம்மை யாரோடு உறவுகொள்ள வைக்கிறார் என்றும், மற்றவர்கள் இன்னும் விடுதலையோடு அவரைச் சார்ந்துகொள்ள அவர்களை எப்படி உற்சாகப்படுத்தலாம் என்றும் ஒவ்வொரு நாளும் அவர் நமக்குக் காண் பிக்குமாறு நாம் அவரிடம் கேட்டால் நன்றாக இருக்கும்.

அங்கு சாதாரணமாக அவரைப் பின்பற்ற வேண்டியதே உங்கள் வேலை. நீங்கள் அப்படிப் பின்பற்றும்போது, அவர் விரும்புவதுபோல் அவர் உங்களைத் தம் சரீரத்திற்கிடையே வைப்பார். அப்போது அவருடைய சரீரத் தின் மற்ற அவயவங்களோடு சேர்ந்து அவரைச் சார்ந்துகொண்டு வளர்வதைப் பகிர்ந்துகொள்கிற மகிழ்ச்சியை நீங்கள் அறிவீர்கள்.